# போட்டி நிறைந்த சூழலில் உட்படுத்தல் கல்வி



இந்த ஆரம்பப் பாடசாலையில் தரம் ஒன்று முதல் ஐந்து வரையில், இணையான 7 வகுப்புக்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு வகுப்பிலும் 40 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். வகுப்பறைகள் ஒவ்வொன்றும் உற்சாகமானதாகவும், ஆர்வமுள்ள மாணவர்களாலும் நிறைந்து காணப்படுகின்றது. அனைத்து மாணவர்களுக்கும் ஊக்கமளிக்கக் கூடிய ஒரு கற்றல் சூழலை உருவாக்க அர்ப்பணிப்புடனான ஆசிரியர்கள் செயற்படுகின்றனர்.

இந்த ஆரம்பப் பாடசாலையானது கொழும்பின் புறநகர் பகுதியொன்றில் அமைந்துள்ளதுடன், பெற்றோர்கள் மத்தியில் அதிக வரவேற்பையும் பெற்றுள்ளது. மாணவர்களை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயார்படுத்துவதில் கவனம் செலுத்துவதன் மூலம் இப்பாடசாலை பிரசித்தி பெற்றுள்ளது. தலைசிறந்த இடைநிலைப் பாடசாலை ஒன்றை பெற்றுக்கொள்வதற்கான நுழைவாயிலாக அமைவதே இதன் பிரசித்திக்குக் காரணம். வருடாந்தம், சுமார் 250 மாணவர்கள் இப் பாடசாலையிலிருந்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றுகின்றனர் அவர்களில் சுமார் 100 பேர் தலைசிறந்த இடைநிலைப் பாடசாலைகளில் சேர்வதற்கு தகுதிபெறுகின்றனர்.

பாடசாலையின் பதில் அதிபரை சந்தித்தோம் "பாடசாலையின் கல்விச் சூழல் மிகவும் போட்டித்தன்மை வாய்ந்தது," என பதில் அதிபர் குறிப்பிட்டதுடன் "பொதுவாக, பெற்றோர் தமது பிள்ளைகளுக்கான மிகச் சிறந்த விடயங்களையே விரும்புகின்றனர்".

"காலை நேரத்தைப் போலவே பிற்பகல் வேளையும் மிகவும் சுறுசுறுப்பாகச் செல்லும்" ஏனெனில். "மேலதிக கற்றல் செயற்பாடுகள், இணைபாடவிதானச் செயற்பாடுகள் மற்றும் ஏனைய வளமான அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்காக, பல மாணவர்கள் பாடசாலை நேரத்திற்குப் பின்னரும் தரித்து நிற்கின்றனர். எமது மாணவர்கள் அனைவரும் கல்வியிலும் தனிப்பட்ட ரீதியிலும் சிறந்து விளங்க மிகவும் கடினமாக உழைக்கும் எங்கள் அர்ப்பணிப்புள்ள உத்தியோகத்தர்கள் பற்றி நாம் பெருமிதம் கொள்கின்றோம்"

“விசேட கல்விப் பிரிவிற்கான அதிகபட்ச ஒத்துழைப்பினை நாம் வழங்குகின்றோம். குறிப்பிட்ட கற்றல் தேவைகளைக் கொண்ட மாணவர்கள் ஏறக்குறைய அனைத்து இணை பாடவிதானம் மற்றும் பாடத்திட்டம் சாராத நடவடிக்கைகளில் இணைந்துகொள்ள ஊக்குவிக்கப்படுகின்றனர். அவர்கள் காலை நேர ஒன்றுகூடுதல்கள், விழாக்கள், விளையாட்டுக்கள் மற்றும் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்கின்றனர்” என பதில் அதிபர் எம்மிடம் கூறினார்.

இலங்கையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் காணப்படும் கடுமையான போட்டியானது, பிள்ளைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு தடையாக இருப்பதாக விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. எவ்வாறாயினும், இப்பிரச்சினை தீர்க்கப்படாமலேயே உள்ளது. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் காணப்படும் இந்தக் கடுமையான போட்டி காரணமாக, குறிப்பிட்ட கற்றல் தேவைகளைக் கொண்ட மாணவர்களுக்காக மேலதிக நேரத்தை ஒதுக்க முடியாத சூழ்நிலை ஆசிரியர்களுக்கு ஏற்படுகின்றது. மாணவர்களுக்கான பாடங்களைத் தயார் செய்வதில் ஆசிரியர்கள் அதிகமான நேரத்தைச் செலவிடுகின்ற நிலையில், விசேட தேவைகளைக் கொண்ட மாணவர்களுக்கு கூடுதல் நேரத்தை ஒதுக்குவது கடினமாக காணப்படுகின்றது.



பாடசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், இரண்டு மாணவர்களுக்கு விசேட கற்றல் தேவைகள் காணப்படுவதை அண்மையில் அடையாளம் கண்டோம். முறையான பரிசீலனைக்குப் பின்னர் அவர்கள் உட்படுத்தல் கல்விச் செயற்பாடுகளில் இணைத்துக்கொள்ளப்பட்டனர். ஆசிரியர் உதவியாளரின் உதவியுடன் ஒரு மாணவர் வழமையான வகுப்பறையில் கல்வி கற்க பரிந்துரைக்கப்பட்டார். பிள்ளைகளின் தேவைக்கு பாடசாலை மனமுவந்து இடமளித்தது.

“விசேட தேவையுடையோருக்கான கல்வியில் தேர்ச்சிபெற்ற திறந்த பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவர் எமது பாடசாலையில் உள்வாரி பயிலுநராக நியமிக்கப்பட்டுள்ளார். பட்டத்தை பெற்றுக்கொண்ட பின்னர், எமது பாடசாலையில் தொடர்ந்து ஆசிரிய உதவியாளராக

செயற்பட அவர் இணக்கம் தெரிவித்துள்ளார். அவருக்கான செலவீனங்களை, மாணவர்களின் பெற்றோர் ஏற்றுக்கொண்டுள்ளனர்" என பதில் அதிபர் மேலும் தெரிவித்தார்.

"ஆரம்ப வகுப்புகளின் ஆசிரியர்களுக்கு உதவும் வகையில், ஆசிரியர் உதவியாளர்களை நியமிக்கும் அரசின் முயற்சியை நாம் பாராட்டுகின்றோம்" என ஆரம்பநிலை ஆசிரியர் ஒருவர் குறிப்பிட்டார். "எவ்வாறாயினும், தற்போதைய சூழ்நிலையை சமாளிப்பதற்கு முடிந்தளவு முயற்சிக்கின்றோம். உள்ளடங்கல் கல்வி நடைமுறை குறித்து பெற்றோர் அதிக விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்"

மாணவர்களின் வசதி கருதி, விசேட கல்விப் பிரிவானது பாடசாலையின் பக்க நுழைவாயிலுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ளது. தேவைப்பட்டால் விசேட கல்விப் பிரிவின் அருகிலேயே வாகனங்கள் வரும் வகையில், அருகிலுள்ள வீதியை அணுகும் வகையில் நுழைவாயில் அமைந்துள்ளது. பாடசாலையின் உட்கட்டமைப்பு வசதியை மேம்படுத்துவதற்கு பாடசாலை சமூகத்தின் ஆதரவை நிர்வாகம் திறம்பட ஏற்பாடு செய்துள்ளது.

"நடப்பதற்கு சிரமப்படும் மாணவர் ஒருவரை, அவரது பெற்றோர் தினமும் பாடசாலைக்கு அழைத்து வருகின்றனர். குறித்த மாணவருக்கு வழமையான பாடசாலை நாற்காலியை பயன்படுத்த முடியாததால் விசேட நாற்காலி வழங்கப்பட்டுள்ளது. இந்த நாற்காலி பாடசாலை சமூகத்தின் உதவியுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது" என பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் கூறினார்.

"விசேட கல்விப் பிரிவிலுள்ள வசதிகளை மேம்படுத்துவதற்கு, பல்வேறு திட்டங்கள் மூலம் திணைக்களம் எமக்கு ஆதரவளித்துள்ளது. தற்போது விசேட தேவையுடைய மாணவர்கள் பயன்படுத்துவதற்கு வசதியாக, கொமட் வசதி மற்றும் சாய்வுதளத்துடன் கூடிய மலசலகூட வசதி காணப்படுகின்றது" என உட்படுத்தல் கல்விப் பிரிவின் ஒருங்கிணைப்பாளர் தெரிவித்தார்.

ஓவியம், பாடல், நடனம், எழுத்துக்கள் மற்றும் எண்களைக் கற்றுக்கொள்வது போன்ற பல்வேறு செயற்பாடுகளில் மாணவர்கள் பங்கேற்பதைக் கண்டோம். பொத்தான்களை போடுதல் மற்றும் பொத்தான்களை கழற்றுதல், தலைமுடியை சீவுதல், சுற்றுச்சூழலை நேர்த்தியாக வைத்திருத்தல், சமையலில் உதவுதல் மற்றும் துணிகளை துவைத்தல், உலர்த்துதல் மற்றும் பொதிசெய்தல் போன்ற முக்கியமான அன்றாட வாழ்க்கைத் திறன்களில் அவர்கள் பயிற்சி பெறுகின்றனர்.

இப்பாடசாலையில் உள்ள விசேட கல்விப் பிரிவானது, பாடசாலை நிர்வாகத்தினதும் சமூகத்தினதும் ஒத்துழைப்பில் சிறந்து விளங்குகின்றது. உட்படுத்தல் கல்விக்காக அவர்கள் செய்யும் அர்ப்பணிப்பானது, அனைத்து மாணவர்களும் கற்பதற்கும், வளர்வதற்கும், அவர்களது முழுத் திறனை அடைந்துகொள்வதற்குமான சந்தர்ப்பத்தை உறுதிசெய்கின்றது. இலங்கையின் சில பிரபல பாடசாலைகள் இன்னும் அதிக போட்டி நிறைந்த சூழலில் இயங்குகின்றன. எனினும், விசேட கல்விப் பிரிவின் ஆதரவுடன் அனைத்து குழந்தைகளையும் சேர்த்துக்கொள்வதற்கு இவ்வாறான பாடசாலைகள் முயற்சிக்கின்றன.